பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

06 03 2025 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் எதிர்காலத்திற்காக புதுமை கண்டுபிடிப்புகளில் முதலீடு செய்வதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.
2. நாட்டின் சமூக பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு இரட்டிப்பாக்கப் பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
3. தமிழகத்தின் பொருளாதாரத்தை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் மூன்று மடங்காக அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மாநில அமைச்சர் திரு ஏ வ வேலு கூறியுள்ளார்.
4. பெண் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில் மகளிருக்கான பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக மாநில உணவு அமைச்சர் திரு சக்கரபாணி தெரிவித்துள்ளார்.
5. சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நாட்டின் எதிர்காலத்திற்காக புதுமை கண்டுபிடிப்புகளில் முதலீடு செய்வதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

வேலைவாய்ப்பு குறித்த இணையவழி கருத்தரங்கில் உரையாற்றிய அவர், நாட்டின் பொருளாதாரத்திற்கு பல லட்சம் கோடி ரூபாய் பங்களிப்பு செய்வதற்கான சாத்தியக்கூறுகள் செயற்கை நுண்ணறிவுத் துறையில் உள்ளதாக குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு சார்ந்த கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு பட்ஜெட்டில் 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

உள்கட்டமைப்பு, தொழில் துறையில் முதலீடு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிப்பதுபோல், மனித வளம், புதுமை கண்டுபிடிப்பு ஆகியவற்றிற்கும் மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

சுகாதாரத்துறை குறித்து குறிப்பிட்ட பிரதமர், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தொலை மருத்துவ வசதி விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

நாட்டின் கடைகோடி மக்களுக்கும் தரமான மருத்துவ சேவை கிடைக்க வேண்டுமென்று அரசு விரும்புவதாக திரு நரேந்திரமோடி தெரிவீத்தார்.

[]<<<>>>[]

நாட்டின் சமூக பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு இரட்டிப்பாக்கப் பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

‘மனித வளத்தில் முதலீடு’ என்ற கருப்பொருளில் நடைபெற்ற இணையவழி கருத்தரங்கில் பேசிய அவர், மனித வளமே நாட்டின் சிறந்த சொத்து என்று கூறினார்.

நாடு முழுவதும் பத்து புதிய இ எஸ் ஐ சி மருத்துவக் கல்லூரிகளை தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதகாவும், மேலும் பத்து கல்லூரிகளை தொடங்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்கும், அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கும் அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை அவர் எடுத்துரைத்தார்.

கடந்த பத்து ஆண்டுகளில் 17 கோடிக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கூறிய திருமன்சுக் மாண்டவியா, கடந்த ஆண்டு மட்டும் நான்கு கோடியே 60 லட்சம் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

தமிழகத்தின் பொருளாதாரம் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் மூன்று மடங்கு அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ஏ வ வேலு தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நெடுஞ்சாலை துறை சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய அவர், மாநிலத்தின் வளர்ச்சிக்கு நெடுஞ்சாலைத்துறை பெரிய பங்களிப்பை அளித்து வருவதாகக் கூறினார்.

மாநிலத்தின் பொருளாதாரத்தை அதிரிக்க வேண்டுமென்ற இலக்கை அடைய ஈடுபாட்டுடன் பணியாற்ற வேண்டுமென்று அவர் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தில் சாலை கட்டமைப்புகள் முறையாக இருப்பதால் வெளிநாடுகளிலிருந்து முதலீட்டாளர்கள் அதிக அளவில் முதலீடு செய்து வருவதாக அவர் கூறினார்.

நாட்டில் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக தமிழகம் திகழ்வதாகவும் திரு ஏ வ வேலு குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் அதிக அளவில் வசிக்கும் கிராம ஊராட்சிகளில் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட முகாம் 60 இடங்களில் நடத்தப்பட உள்ளதாக மாநில ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

அம்மாவட்டத்தில் 30 ஊராட்சிகளில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமில் ஆறு கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு அவர் வழங்கினார்.

அப்போது பேசிய அவர், பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் மீது ஒரு மாத காலத்தில் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நோக்கில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

[]<<<>>>[]

சேலம் மாவட்டம் எடப்பாடி சட்டப்பேரவைத் தொகுதியில் அடிப்படை வசதிகள் உட்பட அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அத்தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

எடப்பாடி தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் மூன்று கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு நேற்று அவர் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், தமது தொகுதியில் கூட்டு குடிநீர் திட்டம், கல்லூரிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பெண் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில் மகளிருக்கான பல்வேறு திட்டங்களை அரசு நிறைவேற்றி வருவதாக மாநில உணவு அமைச்சர் திரு சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் கள்ளிமந்தயத்தில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் 202 பயனாளிகளுக்கு ஒரு கோடியே 98 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

கர்ப்பணிகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், அவர்களின் மனமகிழ்ச்சிக்காகவும் சமுதாய வளைகாப்பு நிகழ்சசிகள் நடத்தப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

கோடை விடுமுறையையொட்டி நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக சிறப்பு மலை ரயில்களை தெற்கு ரயில்வே இயக்கவுள்ளது.

அதன்படி இம்மாதம் 28-ஆம் தேதி முதல் ஜூலை மாதம் ஏழாம் தேதி வரை இந்த சிறப்பு மலை ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - சரவணன் ) ---- 45 செகண்ட்*

**[]<<<>>>[]**

கேரள மாநிலம் ஆட்டுக்கால் பகவதி அம்மன் கோவில் திருவிழாவையொட்டி தெற்கு ரயில்வே சிறப்பு ரயில்களை அறிவித்துள்ளது.

அதன்படி திருவனந்தபுரத்திலிருந்து – நாகர்கோவிலுக்கு வரும் 12-ஆம் தேதி இரவு மணி 8-55-க்கு சிறப்பு ரயில் இயக்கப்படவுள்ளது.,

நாகர்கோவிலிலிருந்து — திருவனந்தபுரத்துக்கு 13-ஆம் தேதி நள்ளிரவு மணி ஒன்று-40-க்கு சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

[]<<<>>>[]

உக்ரைனுடன் புலனாய்வு தகவல்கள் பரிமாற்றத்தை நிறுத்திக் கொள்வதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

[]<<<>>>[]

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தின் சந்தைப்பகுதியில் நேரிட்ட குண்டு வெடிப்பில் நான்கு பேர் உயிரிழந்தனர். ஐந்து பேர் காயமடைந்தனர்.

[]<<<>>>[]

இங்கிலாந்தில் பயணம் மேற்கொண்ட வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு டேவிட் லாமியுடன் இருதரப்பு உறவுகள் குறித்து விவாதித்தார்.

[]<<<>>>[]

மகாராஷ்டிராவில் வருவாய் உள்ளிட்ட சான்றிதழ்களைப் பெறுவதற்கு சமர்ப்பிக்கப்படும் பிரமாணப் பத்திரங்களுக்காக விதிக்கப்படும் 500 ரூபாய் முத்திரைக் கட்டணம் நீக்கப்படுவதாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

[]<<<>>>[]

திருப்பத்தூர் மாவட்டத்தில் அடுத்த மாதம் நான்காம் தேதி ஓய்வூதியதாரர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறவுள்ளதால் இம்மாதம் 15-ஆம் தேதிக்குள் தங்கள் கோரிக்கை மனுக்களை ஆட்சியர் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

[]<<<>>>[]

விவசாயிகளின் போராட்டம் காரணமாக சண்டிகரின் அனைத்து எல்லைகளும் மூடப்பட்டுள்ளதாக காவல்துறை கண்காணிப்பாளர் கீதாஞ்சலி கண்டேல்வால் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே 14 வயது சிறுமிக்கு திருமணம் செய்து வைத்த உறவினர்கள் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

[]<<<>>>[]

திருவள்ளூர் மாவட்டத்தில் சிற்றுந்துகளை இயக்குவதற்கு அனுமதி கோரி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை ஆட்சியர் திரு பிரதாப் ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

தென்காசி மாவட்டம் பழைய குற்றால அருவியில் 24 மணி நேரமும் குளிக்க அனுமதி அளிப்பது குறித்து பரிசீலிக்குமாறு சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை அம்மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவிட்டுள்ளது.

[]<<<>>>[]

கொடைக்கானல் பேரிஜம் ஏரி பகுதியில் யானைகள் நடமாட்டம் உள்ளதால் இன்று முதல் சுற்றுலாப் பயணிகள் அப்பகுதிக்குச் செல்ல வனத்துறை தற்காலிகமாக தடை விதித்துள்ளது

[]<<<>>>[]

பிளாஸ்டிக் பயன்பாட்டை தடுப்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படும் ஒ டி சி பயணக் கப்பல் பொதுமக்கள் பார்வைக்காக சென்னை துறைமுகத்தில் இம்மாதம் 22-ஆம் தேதி வரை நிறுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

லாகூரில் நடைபெற்ற இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் அந்த அணி 50 ரன் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்க அணியை வென்றது.

துபாயில் ஒன்பதாம் தேதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் நியுசிலாந்து - இந்தியாவை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

ஆசிய மகளிர் கபடி சாம்பியன் போட்டி இன்று ஈரானில் தொடங்குகிறது.

இந்தியா இன்று பங்ளாதேஷையும், தாய்லாந்தையும் எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

ஆர்லியன்ஸ் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர் 21-19, 21-14 என்ற செட் கணக்கில் ஜப்பானின் **koo takahashi** -யை வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோகன் கபூர் - ருத்விகா ஷிவானி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

முதல் சுற்றில் இந்த இணை 20-22, 24-22, 21-16 என்ற செட் கணக்கில் தைவான் இணையை வென்றது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஒடிஸா அணி 3-2 என்ற கோல் கணக்கில் ஜாம்ஷெட்பூர் அணியை வென்றது.

இன்று நடைபெறவுள்ள போட்டியில் ஹைதராபத் அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.